விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 216 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 07 சனிக்கிழமை (23.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




காலிமுகத்திடலில் இராணுவம் வெறியாட்டம்

# போராட்டக்காரர்கள் அடித்து விரட்டப்பட்டனர்

## பதவியேற்ற 24 மணிநேரத்துக்குள் தன் சர்வாதிகாரத்தை நிரூபித்தார் ரணில்



- போராட்டக்காரர்கள் சுமார் 50 பேர் காயம்.
- 09 பேர் கைதாகி பிணையில் விடுதலை.
- ஊடகவியலாளர் மீதும் தாக்குதல்.
- அதிகாலை வேளை இராணுவம் அராஜகம்.
- ஐ.நா உட்பட சர்வதேச நாடுகள் கடும் கண்டனம்.

03 ஆம் பக்கம் பார்க்க

## காலிமுகத்திடல் தாக்குதல்

ஐ.நா கவலை




(கொழும்பு)

காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களை கலைக்க படையினரை பயன்படுத்தியமை கவலையளிக்கிறது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

மேலும் ஊடகவியலாளர்கள் மற்றும் ▷11

# மக்களை ஒடுக்கும் நேரம் இதுவல்ல

## ஜனாதிபதி ரணிலிடம் நேரில் சந்தித்து கூறினார் அமெ. தூதுவர்



(கொழும்பு)

குடிமக்களை ஒடுக்குவதற்கான நேரம் இது வல்ல என காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஜனாதிபதி ரணிலிடம் நேரில் சந்தித்து தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி வெடித்ததில் இளைஞன் கை துண்டானது

முகமாலையில் சம்பவம்

(பளை)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி வெடித்ததில் இளைஞன் ஒருவரின் கை தூண்டானது.

பளை பிரதேச இந்திராபுரம் பகுதி ▷11

## அடக்குமுறை நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும்

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் மைத்திரி



(கொழும்பு)

அடக்குமுறை செயற்பாடுகள் நாட்டின் எதிர்காலத்தை ▷11

## புதிய பிரதமராக தினேஷ் பதவியேற்பு



அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் எனத் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக் ▷11

## புதிய அமைச்சரவை பதவியேற்பு

- அனைத்தும் பழைய முகங்கள்
- ராஜபக்ஷக்கள் இல்லை
- ராஜபக்ஷக்கள் இல்லை



(கொழும்பு)

ரணில் தலைமையிலான 18 பேர் கொண்ட புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து ▷11

## ராஜபக்ஷ நிழல் அரசே தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கிறது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் நிழல் அரசாங்கமே தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

காலிமுகத்திடல் [illegible] பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பில் எதிரக் ▷04

## இலங்கைக்கு உதவிகள் வழங்குவதற்கு தயார்

ரணிலுக்கான வாழ்த்துச் செய்தியில் சீனா



(கொழும்பு)

இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பை முன்னெடுத்துச் செல்லும் என்று சீன ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ▷11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஸ்ட ஆசிரியை திருமதி **கிரிஸ்ரின் ஜெயமனோன்** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கிளாரம்மா செல்லையா

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்**

---

# வேலையாட்கள் தேவை (ஆண்)

நெல்லியடியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர், சிற்றுண்டி வேலை தெரிந்தவர், ( தெரியாதவர் ) வேலையாட்கள் தேவை. விருப்பம் உள்ளவர்கள் கீழ் உள்ள இலக்கத்திற்கு உடனே தொடர்பு கொள்ளவும்.

(C-4645)

**077 146 4259**

---

# காணவில்லை

சிவப்பு நிற நிறைமாதக் கன்றுத்தாச்சி வயதான மாடு நீல நிறக் கயிற்றுடன் இரண்டு வாரமாகக் காணவில்லை.
( இராமலிங்கம் றோட், திருநெல்வேலி )

S. சிவகுமார்

(C-4646)

**077 684 5519**

---

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



கடந்த ஆனி மாதம் 4ஆம் திகதி (04.06.2022) அன்று சிவபதமடைந்த

அமரர்
## ஓங்காரரூபி சண்முகநாதன்
(செயலாளர் – சிவகுரு ஆதீனம் )

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இல. 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் நாளை ( 24.07.2022 ) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் மலர்மாலைகள் சாத்தியும் அஞ்சலி செலுத்தி ஆறுதல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்த உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூர் — சிவகுரு ஆதீனம் (C-4644)

---

குருவே துணை

வாழ்க வையகம் — வாழ்க வளமுடன்



# வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
* உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
* மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
* அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
* உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 23.07.2022 சனிக்கிழமை தொடக்கம் 29.07.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4643)

தொடர்புகளுக்கு:- **யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745

---

# மரண அறிவித்தல்

## செல்லையா சிவபாக்கியம்

**பிறப்பு : 25.01.1939 இறப்பு : 20.07.2022**



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவபாக்கியம் அவர்கள் கடந்த 20.07.2022 (புதன்கிழமை) அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கறுவல் - சின்னன் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் நந்தகுமார் (உரிமையாளர் - சிவகாமி அரைக்கும் ஆலை, மஞ்சத்தடி வீதி, கோண்டாவில்), தயாளன் (பிரான்ஸ்), அனிசியா, சிவதர்சி (ஆசிரியை - யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லையா, நாகம்மா, ராசன், தம்பிஐயா, செல்லத்துரை, ராசரத்தினம், கிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தகுமாரி, ஜீவஜாழினி (பிரான்ஸ்), சிவானந்தம், கங்காதரன் (உரிமையாளர் - கங்கன் தச்சுத் தொழிலகம், மயிலணி வடக்கு, சுன்னாகம்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் விந்துஷா, கஜேந்தினி, அனிசா, அன்றியா (பிரான்ஸ்), ரிஷாந்தினி, ஜகிஸ்ணவி, பிரணதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(12226)

தில்லையம்பதி,
கோண்டாவில்.

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது படையினர் மூர்க்கத்தனமான தாக்குதல்

## ❖சுமார் 50 பேர் காயம் ❖பலர் கைது



(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் உள்ள காலிமுகத்திடலில் நேற்று அதிகாலை 2 மணிக்கு நுழைந்த பொலிஸாரும் படையினரும் வந்து ஆர்ப்பாட்டக்காரர்களை பலவந்தமாக அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

ஜனாதிபதி செயலகத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த சில கூடாரங்கள் மற்றும் கட்டமைப்புகளை பாதுகாப்பு படையினர் அடித்துடைத்து. அகற்றியதுடன் பலரைக் கைது செய்துள்ளனர்.



ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற 24 மணித்தியாலங்களுக்குள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது அரச படைகள் வன்முறைகளை பிரயோகித்து வருகின்றன.

நேற்று அதிகாலை 2 மணியளவில் படையினர் போராட்டக்களத்திற்குள் நுழைந்தனர். அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அவர்கள் மூர்க்கத்தனமாக அகற்றினர். செவிப்புலன் பாதிக்கப்பட்டவர்கள், மாற்று வலுவுடைய முன்னாள் படையினருடன் கூட அவர்கள் மிக மோசமாக நடந்து கொண்டனர். பலரைச் சரமாரியாக் தாக்கினர். இவற்றைப் பதிவு செய்ய முயன்ற ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இத் தாக்குதலில் ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள். சட்டதரணிகள் மற்றும் போராட்டக்காரர்கள் உட்பட 50 பேர் வரை காயமடைந்துள்ளனர். (நி-6)

## முப்படையினருக்கு அதிகாரம் விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நாடு முழுவதும் பொது ஒழுங்கைப் பேணுவதற்கு ஆயுதப் படைகளுக்கு அழைப்பு விடுக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு முழுவதும் பொது அமைதியை பேணுமாறு இராணுவத்தினருக்கு அழைப்பு விடுக்கும் அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம் இலங்கை இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை காலிமுகத்திடல் போராட்டக்களத்தை இராணுவத்தினர் கைப்பற்றி அங்கிருந்த போராட்டக்காரர்களை பலப்பிரயோகத்தின் மூலம் விரட்டியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## வாகன இலக்கங்களை மாற்றினால் கடும் சிறைத்தண்டனை

### பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

எரிபொருளுக்காக வாகன இலக்கங்களை மாற்றினால் கடும் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என பொலிஸ் தலைமையகத்தின் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

வாகனங்களின் இலக்கத் தகடுகளை மாற்றி வாகனங்களை பயன்படுத்திய நிலையில் சிக்கினால். 20 ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது மூன்று மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இலக்கத் தகடுகளை மோசடியாக மாற்றுவது. பயன்படுத்துவது, இலக்கத்தகடுகளை அழித்தல் என்பன தண்டனை வழங்கக்கூடிய குற்றங்களாகும் என அவர் தெரிவித்தார். (நி-6)

## அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வன்முறை சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

## போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறைக்கு பல்வேறு நாடுகள் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் நேற்று நள்ளிரவில் ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இலங்கை சட்டதரணிகள் சங்கம் உட்பட பிரித்தானியா. கனடா. சுவிட்சர்லாந்து. நியூஸிலாந்து. நோர்வே ஆகிய நாடுகள் ஆழ்ந்த கவலையும் கண்டனமும் வெளியிட்டுள்ளன.

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரரை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பெற்றோல் கப்பல் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

உலை எண்ணெய் மற்றும் பெற்றோலுடனான கப்பல் ஒன்று நேற்று முன்தினம் இலங்கை வந்ததாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேற்படி உலை எண்ணெய் மின் உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதுடன், உரிய தர சோதனைகளின் பின்னர் இந்த நடவடிக்கைகள் நடைபெறும் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்க முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், தேசிய எரிபொருள் அட்டைக்கான QR குறியீடு சரிபார்ப்பு மற்றும் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-6)

## உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று முன்தினமும் குறைந்துள்ளது. இதன்படி, மசகு எண்ணெய் 3 அமெரிக்க டொலரால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## வந்தடைந்தது சீன அரிசிக்கப்பல்

(கொழும்பு)

500 மில்லியன் யுவான் பெறுமதியான இரண்டு தொகுதிகளைக் கொண்ட 500 மெற்றிக் தொன் அரிசி நாட்டை வந்தடைந்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III -2022

# 10 ஆவது தகுதி காண் போட்டியில் ஹாட்லியையிற்ஸ் அணி வெற்றி

இலங்கை கிரிக்கெ ட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 10 ஆவது தகுதி காண் போட்டியில் ஹாட் லியையிற்ஸ் அணி, AB அணியை 25 ஓட்டங்க ளால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தா டிய ஹாட்லியையிற்ஸ் அணி 40 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழ ந்து 181 ஓட்டங்களைப் பெற் றது. கிரிதரன்-36, ஜீவ பிரசாத்-32, மயூரன்-24, தினோ ஜன்-24 ஓட்டங் களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் AB அணி சார்பாக யதுகுலன் பத்து ஓவர் பந்து வீசி 42 ஓட்ட ங்களைக் கொடுத்து 5 விக் கெட்டுக்களையும், பிரிந்தா பன் 7 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தா டிய AB அணி 35.4 ஓவர் களில் சகல விக்கெட்டுக்க ளையும் இழந்து 156 ஓட்ட ங்களைப் பெற்றது.

AB அணி சார்பாக யது குலன் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும், லிங்கநா தன் 32 ஓட்டங்களையும், ஞானாநந்த சர்மா-28 ஓட்ட ங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹாட்லி யையிற்ஸ் அணி சார்பாக ஜீவபிரசாத் 10 ஓவர்களில் பந்து வீசி 65 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்க ளைக் கைப்பற்றினார்.

இப்போட்டி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டி யின் மூலம் யாழ். சென்றல் விளை யாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டு தொடர்ந்து 13 வரு டங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த களக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING) ஹாட்லியையிற்ஸ் அணி 8.06 புள்ளிகளையும் AB அணி 2.56 புள்ளிக ளையும் பெற்றுக் கொண டமை குறிப்பிடத்தக்கது. (4-6)


## விழிநீர் சொரிகின்றோம்



அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர்
Dr. R. மனிவர்ணனின் அன்புத் தந்தை
அமரர்
**மாணிக்கம் இரகுநாதன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
மலர்வு : 25.03.1940
உதிர்வு : 22.07.2022
(12228)
துயரில் : அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்


# அரியாலை திருமகள் வொலிபோல் லீக்-2022

## இறுதியாட்டம் இன்று

அரியாலை திருமகள் வொலிபோல் லீக் -2022 இன் பருவகாலம் I இன் இறுதியா ட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு அரியாலை திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற உள் ளது. இந்நிகழ்வில் யாழ். மாந கரசபை முதல்வர் வி. மணி வண்ணன், தியாகி அறக் கொடை ஸ்தாபகர் தியாகி வாம தேவா, யாழ். மாவட்ட கரப்பந் தாட்ட சங்கத் தலைவர் அ. ரவிவர்மன் ஆகியோர் விருந் தினர்களாக கலந்து கொள்ளவு ள்ளனர். (4-6)

## ராஜபக்ஷ...

பிரேமதாஸ கருத்து வெளியிட்டு ள்ளார்.

அவரது கருத்தில், ராஜபக்ஷ வின் கைப்பாவை அரசாங்கத் தின் வழமையான மிருகத்த னம் மற்றும் உத்தியோகபூர்வ வன்முறையைப் பயன்படுத்தி, தற்போதைய "ராஜபக்ஷ நிழல் அரசாங்கம்" இன்று (நேற்று) காலை காலிமுகத்திடல் அமை தியான போராட்டக்காரர்களுக்கு எதிராக கோழைத்தனமான மற் றும் வன்முறைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

அதனை செய்தியிட வந்த பல உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு ஊடகவியலாளர்கள் மற் றும் அங்கவீனமான போர்வீர ர்களும் அந்த மனிதாபிமா னமற்ற தாக்குதலுக்கு முகங்கொ டுக்க நேரிட்டதோடு இந்த தாக் குதல். உண்மையான அர்த் தத்திலயே கொடூரமான உத்தி யோகபூர்வ வன்முறையாகும்.

புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்து ஒரு நாள் கழிவதற்குள் இந்த மனிதாபிமானமற்ற தாக் குதலைத் தொடுத்துள்ளதுடன் தனது எதிர்கால ஆட்சியின் தன்மை என்பதை இதன் மூலம் உணர்த்த முற்பட்டுள் ளார் என்றால், இவ்வாறான அட்டூழியங்களுக்கு அப்பாற்பட்ட பலமிக்க அரசாங்கங்கள் மக்கள் சக்தியால் வீட்டுக்கு அனுப்பப்பட் டதை அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

அந்தந்த சிவில் போராட்டத் தின் போராளிகள் ஆக்கிரமித்திரு ந்த இடங்கள் அனைத்தையும் மீள கையளித்துக் கொண்டிருக் கும் போதும், அதற்குள், பாது காப்புப் படையினர் விடியற்கா லையில் புகுந்து, "உயர் உத் தரவுப்படி" இந்த கோழைத்தன மான தாக்குதலை நடத்தியுள் ளனர். ராஜபக்ஷ அரசை வீட்டு க்கு அனுப்ப முற்படுவதற்கு எதி ராக வெறியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதா என்பது எங்க ளுக்குத் தெரியாது. ஆனால் அது அவ்வாறு இல்லை என்று நினை க்க எந்த காரணமும் இல்லை என்றார். (ம-7)


## மரண அறிவித்தல்



பிறப்பு 24 - 01 - 1950
இறப்பு 22 - 07 - 2022

# ஐயாமுத்து சிவராசா

(ஓய்வுபெற்ற உபஅதிபரும் கணித ஆசிரியரும்)

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாமுத்து சிவராசா அவர்கள் 22.07.2022 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாமுத்து - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் ஸ்ரீஜெனனி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) அவர்களின் அன்பு கணவரும் கௌதமன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), நாராயணி (உதவி முகாமையாளர் - கருணாலயம் நீர்வேலி), தாட்சாயணி (தாதியர் உத்தியோகத்தர் - தெல்லிப்பளை), பவதாரணி (3 ஆம் வருட ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராணி அவர்களின் பாசமிகு தம்பியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 24.07.2022 (ஞாயிற்றுக்கிழமை) 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12.00 மணிக்கு கோப்பாய் - கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ றஞ்சனி வாசம்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(12227)
தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 077 275 6234



## ஓராண்டு நினைவுப்பகிர்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மஹேஸ்வரவஹரி நூல் வெளியீடும்



பிலவ வருடம் வைகாசி பூர்வபக்ஷ திரியோதசியில் ஸ்வர்க்கிய ஸ்ரீ ஆகிவிட்ட எங்கள் குடும்பத் தலைவர்

**சிவஸ்ரீ ஐ.மஹேஸ்வரக் குருக்கள்**

அவர்களின் ஓராண்டு குறித்து நினைவுப் பகிரலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நூல் வெளியீடும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய கல்யாண அன்னதான மண்டபத்தில் நாளை 24.07.2022 காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெறும். தொடர்ந்து மதிய போசனமும் இடம்பெறும்.

**நிகழ்வுகள்**

- காலை 9.30 மணிக்கு குருக்கள் ஐயாவின் திருவுருவப்படம் அம்பாள் வாசலில் இருந்து வெளி வீதி வழியாக மண்டபத்தையடைதல்
- அகண்ட மோக்ஷ விளக்கேற்றல்
- ஸ்ரீ ருத்திர வேதபாராயணம்
- திருமுறை பாராயணம்
- மஹேஸ்வரவஹரி நூல் வெளியீடு
- சமாராதனை (மதிய போசனம்)

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எமது குடும்பத் தலைவரின் ஆத்மா ஸ்வர்க்கலோக பிராப்தியடைய வேண்டியும் இந் நிகழ்வில் பங்குபற்றுமாறும் தங்களை பணிவன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(க)

ஸ்வர்க்கிய ஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்களின் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில் சுதுமலை, மானிப்பாய்.
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# QR கோட் நடைமுறை வேண்டாம் எரிபொருள் அட்டை முறையே போதும்

## மன்னார் மக்கள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எரிபொருள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் எரிபொருள் அட்டை நடைமுறையின் படி எரிபொருள் இதுவரை பெற்றிராத கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் 25 ஆம் திகதி முதல் தேசிய ரீதியாக நடை முறைப்படுத்தப்பட உள்ள QR கோட் நடைமுறை வேண்டாம் எனவும் தற்போது மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் எரிபொருள் அட்டை மூலமான எரிபொருள் விநியோகமே எரிபொருள் பதுக்கலை தடுக்க சிறந்தது எனவும் QR கோட் மூலமாக விநியோகித்தால் வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் மக்கள் தொகை குறைந்த மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்து எரிபொருட்களைப் பெற்றுக் கொள்ள வழி ஏற்படும் எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேநேரம் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் வழங்கினால் மீண்டும் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டி வரும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அதேநேரம் அநேகமானவர்கள் சிமார்ட் போன் இல்லாத நிலையில் இணையத்தின் ஊடாக பதிவு செய்ய சிரமப்படுவதாகவும் எனவே கிராம ரீதியாக எரிபொருள் அட்டையின் படி எரிபொருளை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-285)

# மணல் அகழ்வு; மூவர் கைது



(முறிகண்டி)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லிப்பளை பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


நேற்று முன்தினம் மாலை குறித்த கைது இடம்பெற்றுள்ளது. பளை விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக குறித்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டது. இதன் போது, சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த 3 உழவு இயந்திரங்களுடன், 3 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு த்தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6-100-316)

# அதிக கிராக்கி இருந்தும்

# சந்தைப்படுத்த முடியாததால் பழுதடையும் தர்பூசணிகள்

## விவசாயிகள் கவலை



(தருமபுரம்)

கிளிநொச்சி மயில்வாகனபுரம் கிராமத்தில் பசளை மற்றும் கிருமி நாசினி இல்லாத நிலையில் தர்பூசணி செய்கை மேற்கொண்ட விவசாயிகள் உரிய முறையில் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

தற்போது வெயில் காலம் நிலவுவதால் குறித்த பழத்திற்கு அதிக கேள்வி நிலவுகிறது.

எரிபொருள் இன்மையால் வியாபாரிகள் வருவதில்லை இதனால் உரிய காலத்தில் அறுவடை செய்ய முடியாத நிலையில் பழங்கள் பழுதடைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரு சில வியாபாரிகள் வந்தாலும் குறைந்த விலையில் கொள்வனவு செய்கின்றனர்.

பாரிய முதல் போட்டு செய்கை செய்தும் எரிபொருள் பிரச்சனை காரணமாக உரிய இலாபத்தை அடைய முடிய வில்லை எனவும் தெரிவிக்கின்றனர். (4-6-316)

# 25 கிலோ கடலட்டை மீட்பு

(தருமபுரம்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்திவர முற்பட்ட 25 கிலோ கடல் அட்டை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி பகுதியில் இருந்து இராமேஸ்வரத்திற்கு கடல் அட்டை கொண்டு வந்து இலங்கைக்கு கடத்தப்படவுள்ளதாக வனத்துறையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து மண்டபம் பகுதியில் அதிவிரைவாக சென்ற டாடா ஏசி வாகனத்தை வழி மறைத்து சோதனையிட்டபோது அதில் பதப்படுத்தப்பட்ட 25 கிலோ கடல் அட்டை கடத்தி வந்தது தெரிய வந்தது.

இதை அடுத்து 25 கிலோ கடல் அட்டையை பறிமுதல் செய்ததுடன் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு நபர்களை வனத்துறையினர் கைது செய்து விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (4-6-316)

# 6 இந்திய மீனவர்களும் 4 வரை விளக்கமறியலில்

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 6 இராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த புதன்கிழமை மீன் பிடிக்கச்சென்ற ஒரு படகையும், அதிலிருந்த 6 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணைகளை தொடர்ந்து கடற்படையினர் மதியம் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த 6 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-6-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 220 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 550 |
| தக்காளி | 300 | 280 | 270 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 320 | 350 | 200 |
| கோவா | 340 | 360 | 300 | 350 |
| கரட் | 250 | 350 | 360 | 380 |
| பூசணி | 160 | 250 | 200 | 200 |
| புடோல் | 160 | 220 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 200-350 | 380 |
| பெரிய வெங்காயம் | 230 | 230 | 200 | 220 |
| பாகற்காய் | 300 | 260 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 280 |
| பயற்றங்காய் | 120 | 160 | 100 | 250 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 280 | 300 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 350 | 320 |
| போஞ்சி | 400 | 450 | 430 | 480 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | — | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 240 | 250 | 260 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 300 | 320 |
| முள்ளங்கி | 140 | 100 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 150 |

# தேர்ப்பவனி

(அளவெட்டி)

கிளாலி புனித யாகப்பர் யாஸ்திரை ஆலய திருவிழா கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை 24 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை திருவிழா திருப்பலியும் 25 ஆம் திகதி காலை 6 மணிக்கு புனிதரின் திருவிழா திருப்பலியும் தொடர்ந்து தேர்ப்பவனியும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது. (4-6-110)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். கனகசபாபதி லலிதாபூஷணி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி. நந்தினி மாதவன் அவர்களது மாமியார் அமரர். கனகசபாபதி லலிதாபூஷணி அவர்கள் இறைபதமடைந்த மையையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுவதுடன் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொண்டு ஆழ்ந்த இரங்கலைக் கல்லூரிச் சமூகம் தெரிவித்துக் கொள்கிறது.

அதிபர் மற்றும் ஆசிரியர் குழாம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. (12213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய குடியரசுத் தலைவர்

## திரௌபதி முர்முவின் வெற்றிப் பயணங்கள்...



(டில்லி)

♦நாட்டின் 15 ஆவது குடியரசுத் தலை வராகும் திரௌபதி முர்மு, இந்தியா வின் முதல் பழங்குடியினக் குடியர சுத்தலைவர் எனும் பெயரைப் பெறுவார். அத்துடன் இரண்டாவது பெண் குடியர சுத்தலைவர் எனும் பெருமையும் முர்முவுக்குக் கிடைக் கும்.

♦ஒடிசாவின் மயூர்பஞ்ச் மாவட்ட த்தைச் சேர்ந்த முர்மு, தீவிர அரசிய லுக்கு வருவதற்கு முன்னர் ஆசிரி யராகப் பணியாற்றினார்.

♦அதன் பிறகு மாநில அரசிய லில் நுழைந்த அவர், 2000, 2009 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட் டப் பேர வைத் தேர்தல்களில் வென் றார்.

♦ சொந்த மாவட்டத்தில் மயூர்பஞ்ச் தொகுதியிலேயே அவர் இரண்டு முறையும் எம்.எல்.ஏ.ஆகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

♦ ஒடிசாவில் 2000 ஆவது ஆண்டில் பா.ஜ.க.- பிஜூ ஜனதா தளம் கூட்டணி ஆட்சிக்கு வந்த போது, போக்குவரத்து, வர்த்தகம் ஆகிய துறைகளின் அமைச் சராகப் பதவியேற்றார். முர்மு, பின்னர் மீன்வளம், கால்நடை பராமரிப்பு ஆகிய துறைகளை கவனித்தார்.

♦ 2009 இல் பா.ஜ.க.நெருக் கடியாக இருந்த சமயத்தில் திரௌபதி முர்மு வெற்றி பெற்றார். ஜார்க்கண்டு மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட்டதை அடுத்து, அதன் முதல் பெண் ஆளு நராகக் கடந்த 2015 ஆம் ஆண்டில் முர்மு பதவியேற்றார்.

♦ தனது சொந்த வாழ்க்கையில் தனது கணவர் சியாம் சரணையும் இரண்டு மகன்களையும் பறிகொடு த்துள்ளார். ஆனாலும் தனது அர சியல் பாதையில் முன்னேறியுள் ளார்.

♦முன்னதாக சட்டமன்ற உறுப்பி னராவதற்கு முன், 1997ஆம் ஆண் டில் இராய்ரங்பூர் நகர் ஊராட்சியில் மன்ற உறுப்பினராகவும் அவர் பதவிவகித்துள்ளார். (நி-6)

# ஓரங்கட்டப்பட்டார் பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் கீழ், புதிய பிரதமர் தலைமை யில் பழைய அமைச்சரவையின் ஒருவரை தவிர ஏனையோர் மீண் டும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவியேற்றுள்ள னர்.

முந்தைய அமைச்சரவையில் அங்கம் வகித்த, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல். பீரிஸுக்கு அக்கட்சியின் புதிய அரசா ங்கத்தில் அமைச்சுப் பதவி வழங்க ப்படவில்லை.

கடந்த 20 ஆம் திகதியன்று பாரா ளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவின்போது, தற்போதைய ஜனா திபதிக்கு எதிராக, முன்னாள் அமை ச்சர் டலஸ் அழப்பெருமவை வேட் பாளராக ஜி.எல்.பீரிஸ் முன்மொழி ந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, அப்போதைய ஜனாதிபதி வேட் பாளரான ரணில் விக்கிரமசிங்கவு க்கு ஆதரவளிக்க தீர்மானித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தமிழின அடக்கு முறைக்கெதிரான அத்திபாரமே ஜூலைக் கலவரம்



இலங்கை இனவாத வரலா ற்றின் கரும்புள்ளி என வர்ணிக்கப் படுகிறது கறுப்பு ஜூலை.

இந்த நாடு சிங்கள தேசத்திற் குரியதே என்ற கோஷம் மேலெ ழுந்து தமிழினத்தை தமது காலின் கீழ் புழுவாய் நசுக்கும் செயற்திட்டம் திட்டம் அரங்கேற்றப்பட்ட நாள்.

1983 ஜூலை 23 அன்று தமிழி னத்தின் முதுகுகள் பழுப்பேற்றப் பட்ட இரும்புக் கம்பிகளினூடே 'ஸ்ரீ' எனச் சுடப்பட்டது எனின், இனவா தம் எங்ஙனம் ஊற்றெடுத்தது என் பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

முள்ளிவாய்க்காலில் தமது உயிரைக் காப்பாற்ற எவ்வாறு தமிழினம் அல்லோலகல்லோலப்பட்டதோ அவ்வாறே அன்று தெற்கில் தமிழினம் உயிரைக் காப்பாற்ற ஓடி ஒளிந்தது.

ஆனாலும் தமிழரைத் தேடித்தேடி உயிருடன் எரித்துக் கொன்றனர் இனவாதக் காடையர்கள். தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான தமிழர்களின் வர்த்தக நிலையங்கள் அடித்து நொருக்கப்பட்டு சூறையாடப் பட்டதுடன் அவை தீயிட்டும் எரிக்கப்பட்டன.

ஜூலைக் கலவரமே தமிழினம் மீதான அடக்குமுறைக்கு அத்திபாரமாக அமைந்திருந்தது.

தெற்கில் இருந்து தமிழர்கள் முற்றிலுமாக விரட்டியடிக்கப்பட்ட பின்னரேனும் இனவாதச் சிந்தனை கலைந்ததாய் இல்லை.

அதன் பின்பே பேரினவாத சக்திகள் தமிழினத்தை இன்னும் இழிவு நிலை கொண்டு நோக்கினர்.

இதுவே தமிழ் இளைஞர் மத்தியில் சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராக இன்னும் ஆக்ரோசமாய் ஆயுதமேந்தச் செய்தது.

39 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும் தமிழினம் பட்ட துன்பத்துக்கு இன்னமும் விடிவு கிடைக்கவில்லை. காலம் காலமாய் ஆட்சிபீடம் ஏறும் பேரினவாத அரசுகள் தமிழினத்தை இன்னும் கடைநிலைக்கு இட்டுச் செல்ல எத்தனிக்கின்றனரே தவிர தமிழினத்தின் அடிப்படைப் பிரச்சினையினை அறிந்து அதற்கு தீர்வு காண எவரும் முயற்சிக்கவில்லை என்பதே உண்மை. இந்த நிமிடத்தில் வரலாறு காணாத ஒரு செயல் இலங்கைத் திருநாட்டில் நிகழ்ந்திருக்கிறது.

சிங்கள மேலாதிக்கவாதிகளுக்கு எதிராய் சிங்கள மக்களே கிளர்ந் தெழுந்திருக்கிறார்கள். இது தமிழினத்தின் அடிப்படைப்பிரச்சினையைச் தீர்க்க வேண்டும் என்ற சிந்தனையை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்திருக்கும் என நம்புவோமாக.

-இந்திரபுத்திரன்-

# இராசிபலன்

23.07.2022
ஆடி 07, சனிக்கிழமை
தசமி பிற்பகல் 2.59 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 10.42 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம் -
அத்தம், சித்திரை

**வளவன்**



**மேஷம்**

காலைப்பொழுதே கல கலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட முன் னேற்றம் காண்பீர்கள், பணத் தேவை கள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.



**கடகம்**

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள் வதில் ஆர்வம் காட்டு வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெற லாம், உற்சாகத்தோடு பணி புரிவீர் கள், வருமானம் திருப்தி காணும் நாள்.



**துலாம்**

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், வழிபாட் டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ரோகபயமுண்டு.



**மகரம்**

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய கோரிக் கைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.



**ரிஷபம்**

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர் களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலை பேசித் தகவல் ஆச்சரி யம் தரும் வகையில் அமையும், கற்பனை மிகுதியான நாள்.



**சிம்மம்**

கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் நடைபெறு வதற்கான வாய்ப் புண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர் கள், காரிய அனுகூலமுண்டு.



**விருச்சிகம்**

தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளா தார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



**கும்பம்**

வளர்ச்சிப் பாதைக்கு நண் பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும் நாள், சுப தகவல் கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**மிதுனம்**

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெற லாம், எடுத்த காரியங் களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.



**கன்னி**

பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணை வர், பூர்வீகச் சொத்துக் களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**தனுசு**

புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெற லாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உடல் நலன் சீராகும், வியாபார விரோதம் விலகும், கௌரவமான நாள்.



**மீனம்**

பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


உலக வாழ்க்கை ஒரு தொடர் அன்பு ஓட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலத்தை விரைவாக அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(தருமபுரம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட இந்துபுரம் பகுதியில் அமைந்துள்ள பாலம் ஒற்றினை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் கடந்த வருடம் புனரமைத்து தருவதாக கூறி முற்றுமுழுதாக அகற்றியுள்ளனர்.



சம்பவம் தற்பொழுது ஒரு வருடம் கடந்த நிலையிலும் எந்தவித செயற்பாடும் முன்னெடுக்கப்படாத நிலையில் அப்பகுதி ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தினமும் சென்று வருவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மழை காலங்களில் இப் பாதையின் ஊடாக பிரதான வீதிக்கு பயணிக்க முடியாத காரணத்தினால் பல மைல் தொலைவில் சுற்றி பிரதான வீதியை சென்றடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை மாணவர்கள் சுத்தமான உடை அணிந்து செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபை அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு புதிய பாலத்தை விரைவாக அமைத்துத்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதியில் உள்ள பொது மக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-316)

# சாவ.பிரதேச சபையிலிருந்து தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் ஐவர் பதவி விலகினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் ஐவர் பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்து தாமாக விலகியிருப்பதாக பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த ஐவரும் கட்சி சார்ந்த கொள்கை அளவில் தாமாக பதவி விலகியிருப்பதாக தேர்தல் ஆணையாளர் எமக்கு அறியத் தந்துள்ளார் எனத் தெரிவித்தார். (4-6-30)



யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினால் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் "விஞ்ஞானம்" சர்வதேச ஆய்வு மாநாடு இம்முறை நோர்வே நாட்டின் மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானப் பல்ககலைக்கழகத்தின் பங்களிப்புடன் "புதிய இயல்பு நிலையில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை முன்நிறுத்தல்" எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன், ரவிசாந்)

# தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று கண்டனப் போராட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

"கோல்பேஸ் போராட்டக்காரர்கள் மீதான ரணில் - ராஜபக்ஷக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு இந்த போராட்டம் இடம்பெறுமென மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார். (4-6-18-33)

# வவுனியா விவசாயிகளுக்கு யூரியா உர விநியோகம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட கமநல சேவை திணைக்களத்தினருக்கு கிடைக்க பெற்ற 49.5 மெற்றிக் தொன் உரத்தினை விவசாயிகளுக்கு பங்கிட்டு வழங்கும் நடவடிக்கை கமநல சேவை திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 50 நாட்களுக்கு குறைந்த நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு 40 கிலோ யூரியாவும், 50 நாட்களுக்கு மேற்பட்ட நெற் பயிர்களுக்கு ஏக்கருக்கு 20 கிலோ யூரியாவும் ஒரு கிலோ யூரியா 200 ரூபாய் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த உரம் வழங்கும் முதற்கட்ட நடவடிக்கை செட்டிகுளம், அருவித் தோட்டம், நேரியகுளம், பெரிய நொச்சிக்குளம், பாவற்குளம் ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (4-6-250)

# இணையவழி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூலக நிறுவனத்தினால் நிகழ்த்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 47 ஆவது நிகழ்வாக "நெவின்ஸ் சிதம் பரப்பிள்ளையின் நியாய இலக்கணம்: தமிழர் மெய்யியலின் செல்நெறியில் ஈழத்தவரின் வகிபாகம்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக் கிழமை இரவு 7.30 மணிக்கு இடம் பெறும்.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்து மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் வளவாளராகக் கலந்துகொள்வார். ஒருங்கிணைப்பாளராக மயூரநாதன் இரத்தினவேலுப்பிள்ளை செயற்படுவார். (4-6)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப்பெயர் மாற்றம்

## இல.11,பாணாவெட்டி வீதி, 1ம் ஒழுங்கை, வட்டாரம்-03

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03 பாணாவெட்டி வீதியிலுள்ள இல.11 ம் இலக்க ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்திலும் சொரியலாக 1/3 பங்கினை **தம்பிமுத்து இராயு** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பொ.கணபதிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6878/15.09.1956 ம் இலக்க உறுதியால் **தில்லையம்பலம் சபாபதிப்பிள்ளை கைம்பெண் செல்லம்மா** ஆகியவரிடமிருந்து நன்கொடையாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த சொரியல் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினையும் **துரையப்பா இராமநாதனும், குறித்த தம்பிமுத்து இராயு மறுநாமம் இராசுவும், தில்லையம்பலம் சபாபதிப்பிள்ளை கைம்பெண் செல்லம்மாவும்** ஆகியவர்கள் சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5300/12.02.1961 ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து தத்தமது பகுதிக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்க்ள். குறித்த துரையப்பா இராமநாதன் காலம் செல்ல அவருக்குரிய பகுதி ஆதனமானது துரையப்பா. கைம்பெண் வள்ளியாச்சியும் தம்பிமுத்து சிறீகரனும் ஆகியவர்களிற்கு உரிமையாக வந்தடைந்தது.

குறித்த பகுதி ஆதனத்தினை **இராமநாதன் கைம்பெண் சோதிமுத்து** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3018/11.12.1976 ம் இலக்க உறுதியால் குறித்த **துரையப்பா கைம்பெண் வள்ளியாச்சியும், தம்பிமுத்து சிறீகரனும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த ஆதனத்தினை **சுந்தரராஜ குருக்கள் ஸ்ரீரங்கன் குருக்கள்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5963/14.03.2007 ம் இலக்க உறுதியால் குறித்த **இராமநாதன் கைம்பெண் சோதிமுத்து** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **சுந்தரராஜ குருக்கள் ஸ்ரீரங்கன் குருக்கள்** ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சுந்தரராஜ குருக்கள் ஸ்ரீரங்கன் குருக்கள்** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(32210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

## அண்ணன் வந்தான்!

(நேற்றைய தொடர்ச்சி)

பரமனும் "சரி சரி வருத்தப்படாதே நம் வீட்டிலிருந்து ஒரு துரும்பு கூடக் காணாமல் போகவில்லை. இது அந்தத்திருடன் எழுதி வைத்து விட்டுப்போன கடிதம். இதைப் படி" என்று கடிதத்தை புஷ்பாவிடம் கொடுத்தான்.

அக்கடிதத்தில் திருடன் "எனக்கு வேலை எதுவும் கிடைக்காததால் திருடுவது என நினைத்து முதல் தடவையாக உங்கள் வீட்டில் திருட வந்தேன். காவல் வீரர்கள் வந்த போது நடுநடுங்கினேன். உங்கள் மனைவி தான் திருட்டுத்தனமாகச் செய்வதை மறைக்க என்னைத் தன் அண்ணனாகக் கூறினாள். அதனால் நீங்கள் காவல் வீரர்களிடம் என்னை உங்கள் மைத்துனன் எனக் கூறி அனுப்பி விட்டீர்கள்.

உங்கள் மனைவி செய்யும் ஒரு சிறு திருட்டு வேலைக்கு இவ்வளவு சிரமப்பட வேண்டும் என்றால் நான் செய்யவிருந்த திருட்டிற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டி வருமோ? திருடிப் பிழைப்பதால் மனதில் நிம்மதி இராது என்று எனக்குத் தெரிந்து போயிற்று. அதனால் உடல்



வளைய உழைத்து கிடைக்கும் ஊதியத்தில் திருப்தியுடன் வாழத் தீர்மானித்து விட்டேன். நான் மாறியது போல என் சகோதரியும் மாற வேண்டும்" என்று எழுதி இருந்தான். புஷ்பா கடிதத்தைப் படித்து விட்டு கண்ணீர் உகுத்தவாறே "நான் செய்த தவறை மன்னிப்பீர்களா?" என்று கேட்டாள். பரமனும் "மன்னிப்பு எதற்கு. உன் விருப்பம் என்ன என்பதை நான் அறிந்து கொள்ளவில்லை. நீ அதை நிறைவேற்றிக் கொள்ள முயன்றாய். உன் நகைகள், புடைவைகளெல்லாம் பத்திரமாக அதோ இருக்கிறது பார். நான் உனக்கு முன் கண் விழித்து எழுந்து போய்ப் பார்த்த போது திருடன் இருக்கவில்லை. இக் கடிதம் தான் இருந்தது. சரி உன் இஷ்டப்படி சமைக்க விடாதது என் தவறு தவிர இனி உன் இஷ் டம் போல் சமைத்து எனக்கும் போடு. எனக்கும் சந்தோசமே" என்றான்? தன் கணவன் தன்னைக் கோபித்துக் கொள்ளாமல் தன் இஷ்டப்படி செய்யச் சொன்னது கேட்டு அவள் மகிழ்ந்தே போனாள். (முற்றும்)

# சிலப்பதிகாரம்

## கவிதை அரங்கேறும் நேரம்




கோவலனது வர்ணனைகள் கண்ணகியை வெட்கப்படச் செய்தன. வெட்கம் ஆசைக்கு எதிரான உணர்வு தான்.

ஆனால் அது பெண்களுக்கு. பெண்களின் வெட்கம் ஆண்களைப் பொறுத்த வரை மௌன மான சம்மதம், தயக்கமான அழைப்பு. ஆகவே அது ஆண்களின் காமத்தீயில் வார்த்தை நெய்யாகத்தான் இருக்கிறது.

புகைந்து கொண்டிருந்த கோவலனின் காமம் இந்த வெட்க நெய்யில் பற்றிக்கொண்டது. கொழுந்து விட்டு எரிந்த அந்தத் தீ கண்ணகியையும் பற்றிக்கொண்டது.

கண்ணகி என்கிற கவிதையை மாநாய்கனும் அவர் மனைவியும் மிக நேர்த்தியாக எழுதியிருந்தார்கள். தேர்ந்த கவிதைகளில் சொல்நயம், பொருள் நயம் இரண்டும் இருப்பது போல கண்ணகி பார்வைக்கும் இதமாக இருந்தாள். பரவசமான அனுபவத்திலும் இனிமையாக இருந்தாள். கவிதைகள் எழுதியவர்களை விட படிக்கிறவர்களுக்குத்தானே அதிக இன்பம் தருவது! கண்ணகி என்கிற கவிதை அரங்கேறியது.

கோவலன் அந்தக் கவிதையை ஒவ்வொரு சொல்லாகப் படித்து பொருளை அனுபவித்துப் பின் ஒரு சேர முழுதாகப் படித்தான். கவிதையின் நயம் அவனை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டியது.

இன்ப இரவுகள் தொடர்ந்தன.

இப்போது கோவலனின் தாய்க்கு ஓர் ஆவல். தன் மருமகளுக்கு விருந்தினர் களை உபசரிக்கும் பண்பு, மூத்தவர்களிடம் மரியாதை, உறவினர்களோடு கூடி இருப்பது ஆகிய குணங்கள் இருக்கின்றனவா? என்று தெரிந்து கொள்கிற விருப்பம். தனக்குப் பின்னால் தன்னைப் போலவே கோவலனை கவனித்துக் கொள்ளும் திறமை இருக்கிறதா? என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம்.

ஆகவே கண்ணகியையும் கோவலனையும் துணைக்கு ஏராளமான பணியாளர்களுடன் குடித்தனம் வைத்தார் அவர். மருமகள் என்ன செய்கிறாள் என்று கவனிக்க ஆரம்பித்தார்.

மாமியாரின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை.

கண்ணகி மிகச் சிறப்பாகக் குடித்தனம் நடத்தினாள். கோவலனை ஒரு குழந்தை போலப் பராமரித்தாள்.

மிக விரைவில் அனைத்து உறவினர் களின் அன்பையும் மதிப்பையும் பெற்று விட்டாள். கோவலனின் பெற்றோர் குழந்தையாகவே எண்ணிப் பாசத்தைப் பொழிந்தார்கள்.

ஆண்டுகள் கழிந்தன.

ஒருநாள் அப்படி சம்பவம் நடக்குமென்று கண்ணகி மட்டுமில்லை கோவலனும் எதிர்பார்க்கவில்லை.

அந்தச் சம்பவம் மட்டும் நடக்காமல் இருந்திருந்தால் அவர்களது இனிய மணவாழ்க்கை மேலும் பல ஆண்டுகளுக்குச் சிறப்பாகத் தொடர்ந்திருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.

*– அலன் தார்ன்ஹில்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அட்டமியில் பதவியேற்று ஆரம்பித்து வைத்த ரணில்

"அட்டமி" தமிழர் வாழ்வியலில் விலக்கப்பட்ட நாள்.

அதற்கான சோதிடக் காரணத்தை இங்கு விளக்குவது விரிவாகிவிடும் என்பதனால் அதனைப் பிறகொரு சந்தர்ப்பத்துக்கு விட்டு விடலாம்.

மாறாக அட்டமி, பௌர்ணமி, அமாவாசை ஆகியன கனத்த நாட்கள் என்பது நம் தமிழர் வாழ்வியலின் கணிப்பு.

சூரிய, சந்திரனை வைத்து கணிக்கப்படும் மேற்போந்த நாட்களில் கடல் கொந்தளிப்பதும் மனநிலைகளில் மாற்றங்கள் ஏற்படுவதும் குருதிச்சுற்றோட்டத்தின் வேகம் அதிகரிப்பதுமான நிகழ்வுகள் நடப்பதனை கணிப்பிட்டுள்ள விஞ்ஞான அறிவியல் சூரிய, சந்திர பார்வை பூமியின் கண் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்ற முடிவை ஏற்றுள்ளது.

இதன் காரணமாகவும் அட்டமி நாள் நற்காரியங்களுக்குப் புறந்தள்ளப்படுகின்றது.

எனினும் இந்த நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க சரி அட்டமி தினத்தில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இதற்கு மேலாக, அவர் பதவியேற்கும் போது மின்சாரம் தடைப்பட்டதான தகவல்களும் உண்டு. நடக்கப்போவது என்னவோ நாம் அறியோம்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற மறுகணம், காலிமுகத்திடலில் அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் ஏற்பட்ட கரும் புள்ளி எனலாம்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தாமாக விலகிப்போகவிருந்த நேரத்தில், அவசரப்பட்டதுபோல படையினர் புகுந்து அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களைத் தாக்கியமை ஒரு பொருத்தமான செயலாகத் தெரியவில்லை.

இதோ, நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றுவிட்டேன். இனி நான் சும்மா இருக்கமாட்டேன். நான் ஒன்றும் கோட்டாபய ராஜபக்ஷவல்ல. போராட்டக்காரர்களை அடக்குவேன் என்பதைச் சொல்லாமல் சொல்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த காரியம் எடுத்த எடுப்பிலேயே கோணலாகிப் போயிற்று.

உண்மை மேற்போந்த சம்பவத்தை அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, நோர்வே உள்ளிட்ட உலக நாடுகளும் ஐ.நா சபை, மன்னிப்புச்சபை போன்ற சர்வதேச பொது அமைப்புகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இது புதிய ஜனாதிபதிக்கு ஏற்பட்ட இழுக்கு என்றே கூறவேண்டும்.

எது எவ்வாறாயினும் "இளம் செயற்பாட்டாளர்களால் இம்மாற்றம் சாத்தியமானதென்பதை ரணில் நினைவில் வைத்திருப்பார்" என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிய ஆழ்ந்த கருத்து புதிய ஜனாதிபதியின் செவிகளைச் சென்றடையவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

# உங்களை நினைக்க அவமானமாக உள்ளது சீருடைகளை அணிய தகுதியே இல்லை

## இராணுவத்தினரிடம் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஆவேசம்

உங்களை நினைக்க அவமானமாக உள்ளது. உங்கள் சீருடைகளை அகற்றுங்கள் அதை அணிவதற்கு நீங்கள் தகுதியானவர்கள் இல்லை என காலிமுகத்திடல் போராட்டக்கள பெண் ஒருவர் இராணுவத்தைப் பார்த்து கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் உள்ள போராட்டகாரர் மீது நேற்று படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பில் போராட்டக்கள பெண் ஒருவர் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், "வெட்கமாக இருக்கிறது உங்களை நினைப்பதற்கு நாங்கள் இங்கு புத்தகத்தை தான் பாதுகாக்கிறோம் குண்டு வீசவில்லை.

நீங்கள் இங்கு நடப்பதைப் பார்த்து கொண்டு தானே இருக்கின்றீர்கள். நீங்கள் எங்கள் மீது கண்ணீர்ப் புகை தாக்குதல் நடத்தினீர்கள் எங்களால் மூச்சு எடுக்க முடியாமல் இருந்தது.

ஆனால் நாங்கள் இந்த கட்டடத்தை பாதுகாத்தோம். வேறு ஒன்றும் செய்யவில்லை. உங்களை நினைக்க அவமானமாக உள்ளது. உங்கள் சீருடைகளை அகற்றுங்கள். அதை அணிவதற்கு நீங்கள் தகுதியானவர்கள் இல்லை" எனக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பொதுமகன் ஒருவர், "எனது தந்தை ஓய்வு பெற்ற இராணுவ வீரர். அவர்கள் 30 ஆண்டு யுத்தம் செய்தனர். ஆனால் அவர்கள் அமைதியாக போராடியவர்களை தாக்கவில்லை.

தற்போது போராட்டக்காரர்கள் வைத்தியசாலையில், அவர்கள் எந்த வன்முறையிலும் ஈடுபடவில்லை புத்தகத்தை தான் பாதுகாத்தனர்" என்று சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவாது

## அரசியல் ஆய்வாளர் டெபோரா

(கொழும்பு)

தற்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்கு கிடைப்பது கடினம் என ஜோன் ஹொப்ஹின்ஸ் பல்கலைக்கழக பேராசிரியரும் அரசியல் ஆய்வாளருமான டெபோரா பிராவுட்டிகம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போதைய குழப்பநிலையிலிருந்து மீண்டாலேயே சர்வதேச நாணய நிதியம் உதவ முன் வரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுடன் இடம்பெற்ற நேர்காணலிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், "நிலைவரம் தொடர்ச்சியாக குழப்புமானதாக காணப்படும் போது சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியாது.

அதேவேளை, நாட்டில் ஸ்திரத்தன்மை இருந்தால் அவர்கள் உதவ முன்வருவார்கள். பணம் திருப்பி கிடைக்காது என கருதவேண்டிய நிலை காணப்பட்டால் சர்வதேச நாணயநிதியம் நிதி உதவி செய்யாது", எனக் குறிப்பிட்டார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **மன்னார் பிரதேசத்தில்** சி.இ.சி.பி.(சிலாபத்துறை), சிலாபத்துறை கடற்படை முகாம், அகத்தி முறிப்பு, அகத்தி முறிப்புத் திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர்வழங்கல் சபை, ஆத்தி மோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழித் திட்டம், கொக்குபடையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர் வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மடுக்கரை, மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, மேதன்வெளி, முள்ளிக்குளம், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேனி, பாலைக்குழி, பாலைக்குழித்திட்டம், பரிகாரிக்கண்டல், பிச்சைகுளம், பிச்சை வாணிபங்குளம் திட்டம், பொன் தீவுகண்டல், கள்ளி மோட்டை புளியங்குளம், பொன்னாச்சிக் குளம், புதுக்காமம் கிராமம், புதுக் குடியிருப்பு (சிலாபத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி திட்டம், சிலாபத்துறை, சின்னப் பொள்ளாச்சி பொற்கேனி, தம்பட்ட முசலி, வெள்ளிமலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## பற்றில்லாமல் இருக்க

❖ முக்தி என்றால் முழு சுதந்திரம். தீமைத் தளையிலிருந்தும், அது போலவே நன்மைத் தளையிலிருந்தும் சுதந்திரம் பெறுவது. இரும்புச் சங்கிலியைப் போலவே தங்கச் சங்கிலியும் தளைதான். என் கையில் முள் ஒன்று குத்தியிருக்கிறது. அதை எடுப்பதற்கு இன்னொரு முள்ளையே பயன்படுத்துகிறேன். எடுத்து முடிந்ததும் இரண்டையுமே எறிந்து விடுகிறேன். இரண்டாவது முள்ளை நான் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில் இரண்டும் முட்களே.

❖ அது போலவே தீய இயல்புகள் நல்ல இயல்புகளால் சமன்படுத்தப்பட வேண்டும். நல்ல சம்ஸ்காரங்களின் புதிய அலைகளைப் பாய்ச்சி தீய சம்ஸ்காரங்களை ஏறக்குறைய அவை மறைகின்ற வரையில், ஒடுங்குகின்ற வரையில், மனதின் ஒரு மூலையில் கட்டுப்படுத்தப்படும் வரையில் நீக்க வேண்டும். அதற்குப் பிறகு நல்ல இயல்புகளையும் வெற்றி கொள்ள வேண்டும். இவ்வாறாகிய பற்று 'பற்றின்மை' ஆகிறது.

❖ செயற்படு! ஆனால் அந்தச் செயலோ, எண்ணமோ மனதில் ஆழ்ந்த பதிவை உண்டாக்காமல் [illegible]டும். உடம்பிலிருந்தும் பெரிய பெரிய செயல்கள் புறப்படட்டும். [illegible] பதிவு எதையும் உண்டாக்க அனுமதிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2022 - 16.08.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு!



**அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் கும்ப இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரயஸ்தானத்தில் வக்கிரம் பெற்றிருக்கிறார். வெற்றிகள் ஸ்தானத்தில் இராகுவும் பாக்கிய ஸ்தானத்தில் கேதுவும் இருக்கிறார்கள். எனவே விரயங்கள் அதிகரிக்கும்.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். பஞ்சம - அஷ்டமாதிபதியான அவர் சப்தமஸ்தானத்திற்கு வரும்பொழுது பிள்ளைகள் வழியில் சுபவிரயங்கள் ஏற்படும். மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். தொழிலில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக பணியாளர்களால் சிறு தொல்லைகள் வரலாம்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. தொழில் மேம்பாட்டிற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. தனாதிபதி குரு வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படும். புதிய மனிதர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம். குடும்பப் பிரச்சினை அதிகரிக்கலாம். கொடுக்கல் - வாங்கல்களில் ஏமாற்றம் வரக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது ஆலோசித்து முடிவெடுங்கள். இலாப ஸ்தானத்திற்கும் அதிபதியாக குரு விளங்குவதால், இலாபம் வருவதில் சிறு குறுக்கீடு ஏற்படும். பங்குதாரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். தொழில் பிரச்சினை




அதிகரிக்கும். விற்பனைப் பிரதிநிதிகளை அனுசரித்துச் செல்லுங்கள். உங்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மற்றவர்களுக்குப் போகலாம்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 4 ஆம் இடத்திற்கு வரும் போது நல்ல பலன்கள் கிடைக்கும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். உடன்பிறந்தவர்களின் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் இராமபிரான், சீதாதேவி வழிபாடு செய்வதன் மூலம் நன்மை கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. சனி வக்கிரம் பெற்றிருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரம் இது. பிள்ளைகளின் வழியிலும், உறவினர்கள் வழியிலும் பிரச்சினை உருவாகலாம். பணிபுரியும் இடத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சலுகைகள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். உயரதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

## உற்சாகத்துடன் பணிபுரியும் நேரம் இது!



**மனசாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லும் மீன இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் வியாழன் பலம் பெற்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன்.

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான அவர், 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது நற்பலன்களையே வழங்குவார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த புது முயற்சி வெற்றி பெறும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் நெருக்கம் ஏற்படும். உற்சாகத்தோடு பணிபுரியும் நேரம் இது.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல.

பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படும். பூர்வீக சொத்துத் தகராறு மீண்டும் தலை தூக்கும். பாகப் பிரிவினை இழுபறி நிலையில் இருக்கும். பிறருக்கு பொறுப்பு சொல்வதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குரு.

அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடல் நலப் பாதிப்புகளும் மனக்கசப்புகளும் அதிகரிக்கும். வாழ்க்கைத் தேவைகள்




கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். உத்தியோகம் மற்றும் தொழிலில் இடமாற்றம், ஊர்மாற்றம் வந்து சேரும். 10 ஆம் இடத்திற்கும் அதிபதியாக குரு விளங்குவதால், தொழில் பங்குதாரர்களால் தொல்லைகள் ஏற்படும். திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லும். பணி புரியும் இடத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. மனக்குழப்பம் அதிகரிக்கும் நேரம் இது.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றங்கள் திருப்திகரமாக இருக்கும்.

மேலதிகாரிகளின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நேரம் இது. இம்மாதம் செவ்வாய்க் கிழமை தோறும் விரதமிருந்து வராகரை வழிபடுவதன் மூலம் வளர்ச்சி கூடும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உங்கள் இராசியைப் பார்க்கும் சனி வக்கிரம் பெற்றிருப்பதால் மாற்றங்கள் வந்து கொண்டேயிருக்கும். உடல் நலம் சீராகும். உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும். கணவன் - மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் அமைதி காண இயலும். பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் உண்டு. பணிபுரியும் இடத்தில் வேலைப்பளு அதிகரித்தாலும் அதற்கேற்ப வருமானமும் வந்து சேரும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணிவெடி...

யில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணிபுரியும் இளைஞன் கடமையில் இருந்தபோது மதிய உணவு உண்டு விட்டு கண்ணிவெடி ஒன் றினை வைத்து தட்டிய வேளையே வெடித்துள்ளது.

காயமடைந்து கை துண்டான நிலையில் இளைஞன் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த இளைஞன் பளை செல்வபுரத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (ம-7,316)

## அடக்குமுறை...

பாதிக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு, காலிமுகத்திடல் பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேற்று அதிகாலை முப்படையினர் அங்கிருந்து அகற்றினர்.

இவ்வாறு அடக்குமுறையைப் பயன்படுத்தி மக்கள் போராட்டத்தை அடக்கியமை குறித்து முன்னாள் ஜனாதிபதி தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

“காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சிறந்தது. அதனைவிடுத்து சர்வதேசத்தின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படும் இந்த நேரத்தில், அடக்குமுறைச் செயற்பாடுகள் நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## புதிய அமைச்...

கொண்டனர்.

பிரதமர் அலுவலகத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, முன்னதாக அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களில் அநேகமானோர், மீண்டும் அமைச்சரவை அமைச்சர்களாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

பிரதமர் தினேஸ் குணவர்தன மற்றும் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சராக சுசில் பிரேமஜயந்த, போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சராக பந்துல குணவர்தன, சுகாதாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல, விவசாயம், வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்புத்துறை அமைச்சராக மகிந்த அமரவீர, நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சராக விஜேதாஸ ராஜபக்ஷ, சுற்றுலா மற்றும் காணி அமைச்சராக ஹரின் பெர்னாண்டோ, பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சராக ரமேஷ் பத்திரன, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரசன்ன ரணதுங்க, வெளிவிவகார அமைச்சராக அலி சப்ரி, பௌத்த சாசனம், சமய அலுவல்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சராக விதுர விக்கிரமநாயக்க, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சராக காஞ்சன விஜேசேகர, சுற்றாடல் அமைச்சராக ஹாபிஸ் நஷீர் அஹமட், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ரொஷான் ரணசிங்க, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக டிரான் அலஸ், வர்த்தகம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சராக நளின் ருவன்ஜீவ பெர்னாண்டோ ஆகியோர் பதவியேற்றுள்ளனர். (ம-7)

## புதிய பிரதமராக...

களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். ஜனநாயகத்தை பாதுகாக்க சட்டம் முழுமையாக செயற்படுத்தப்படும். ஜனநாயகத்திற்கு முரணாக எவராலும் செயற்பட முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றைய தினம் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சமூக கட்டமைப்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நட்பு நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஆதரவுடன் தீர்வு காண அரசாங்கம் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

எரிபொருள், எரிவாயு ஆகிய சேவை கட்டமைப்பு சிறந்த முறையில் விநியோகிக்கப்படும்.

நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டால் சமூக கட்டமைப்பில் காணப்படும் ஏனைய பிரச்சினைகள் இயல்பாகவே இல்லாமல் போகும். அரசியல் ரீதியில் மாறுபட்ட கொள்கை காணப்பட்டாலும் நாட்டுக்காக ஒன்றிணைந்துள்ளோம். நாட்டுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். ஜனநாயகத்தை உறுதிப்படுத்த சட்டத்தை முறையாக செயற்படுத்துவோம் என்றார். (ம-7)

## மக்களை ஒடுக்...

இது தொடர்பில் அவர் டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், ஒரே இரவில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து தனது ஆழ்ந்த கவலையை தெரிவிக்க ஜனாதிபதியைச் சந்தித்ததாக தெரிவித்துள்ளார்.

சிறந்த எதிர்காலத்திற்கான இலங்கையர்களின் அழைப்புகளுக்கு பதிலளிக்க, ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைக்கு ஒரு வாய்ப்பும் கடமையும் உள்ளது.

குடிமக்களை ஒடுக்குவதற்கான நேரம் இதுவல்ல.

மாறாக, மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவும், பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் அரசாங்கம் எடுக்கக்கூடிய உடனடி மற்றும்உறுதியான நடவடிக்கைகளை எதிர்நோக்க வேண்டுமென அமெரிக்க தூதுவர் மேலும்தெரிவித்துள்ளார். (ம-7)

## காலி...

மனித உரிமைப் பாது காவலர்களுக்கு ஆர்ப்பாட்டங்களைக் கண்காணிக்க உரிமை உண்டு.

எனவே அவர்களின் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்தப் படக்கூடாது என ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார். (ம-7)

## பாதுகாப்புச் செயலாளராக மீண்டும் கமால் குணரத்ன

ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன மீண்டும் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். (ம-7)

## இலங்கைக்கு...

அரசியல் ரீதியான பரஸ்பர நம்பிக்கையை பலப்படுத்தி நேர்மையான உதவி மற்றும் நிரந்தர நட்புறவை முன் கொண்டு செல்லவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நியமனத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிக்கும் கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை ஜனாதிபதியின் தலைமையின் கீழ், நாடு தற்காலிக சிரமங்களை சமாளித்து, சமூக மீட்சிக்கான செயல்முறையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கை மக்களுக்கு தன்னால் இயன்றளவு ஆதரவையும் உதவியையும் வழங்க தயாராக இருப்பதாகவும் சீன ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

தன நிதானய
திகதி - 2022.07.22
சீட்டிழுப்பு இலக்கம் - 854
Z 27 31 49 72

மஹஜன சம்பத
திகதி 2022/07/22
சீட்டிழுப்பு இலக்கம் 4824
W 6 9 4 1 4 6

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 133
மிதுனம் 11 12 42 55 மிதுனம்

மெகா பவர்
திகதி 22/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1172
H 01 08 28 60 71

கொவிசெத
திகதி 2022.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 3066
I 17 21 77 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1302
சிம்மம் 1 7 3 2 2 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1799
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.07.22
தினம் வெள்ளிக்கிழமை
X 25 44 62 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,062,560/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.22
சீட்டிழுப்பு இல : 3960
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,655,780/-
34 44 45 65 M

சசிரி
சீட்டிழுப்பு 199
சீட்டிழுப்பு திகதி 2022.07.22
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 24 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,451,320/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,039,370/-
வெற்றி இலக்கங்கள் 08 11 47 53
திகதி 2022-07-22
வெற்றி வாரம் 3511
வர்ணம் நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 6,218,500/-

வாசனா 24
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 26 30 32 63 65
சீட்டிழுப்பு வாரம் 975
திகதி 2022.07.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 249,123,613/-
தொலைபேசி : 011-2 333 546-47

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1625
சீட்டிழுப்பு திகதி : 2022.07.22
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,696,080/-
17 43 54 71 H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

மேலும் மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை மாபிளை உடைத்து சேதப்படுத்தாமல் சிறந்த இரசாயனங்கள் மூலம் நீர்க் கசிவினை நிறுத்தித் தருகிறோம்.

**Skyline Water Proofing**

1 சதுர அடி ரூ.200/-... முதல்

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743 (12216)



# UK அல்லது கனடாவில் உயர்கல்வி

10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற... (12198)

WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989



# வீடு வாடகைக்கு

யாழ். நகரின் மையப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (12225)

072 699 5175


# எம்.பியாகிறார் வஜிர

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் வஜிர அபேவர்தன பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.

அபேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்மொழியப்பட்டதை அடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)


# காணி விற்பனைக்கு

**யாழ். நாவற்குழி சந்தியில் 81 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 பிரதான வீதி முக்ப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் (**400,000/=**) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

**பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை** (12199)

076 490 5403, 076 491 2493, 076 490 6029



# Mega Job Interviews

6+ Companies (Software, IT, Finance, Food-city, College,media....)

50+ Vacancies ( Driver, Cashier, Manager, Data Entry, Software Engineer, QA, Telephone Operator, Marketing, Designer, Lecture, Front office...)

Interview : Time 1.00pm - 3.00pm
Date : 25.07.2022 (12222)

DEWMAS, No.51, Amman Road, Nallur.
077 773 3368, 074 138 3368



# தேவை

இணுவில், கொக்குவில், தாவடிப் பகுதியில் 1 பரப்புக் காணி தேவை. அத்துடன் 2 பேர் வசிக்கக் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு (12209)
076 646 3860



# பெயின்ரர் தேவை

கொடிகாமத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்குரிய பெயின்ரிங் வேலையை ஒப்பந்த அடிப்படையில் செய்து தரக்கூடிய பெயின்ரர் (Painter) தேவை. (C-4641)

076 316 5731


# 9ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 21.05.1948 விண்ணில் 01.08.2013

## ஆனந்தன் செல்வநாதன்

(உரிமையாளர் - அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

**திதி : 23.07.2022 வளர்பிறை தசமி**

அன்பே உருவான கருவில் அவதரித்து
இன்பம் தழைத்தோங்க இன்முகத்தால் வரவேற்று
பண்பை பணிவை பார்போற்றும் உழைப்பை
எமக்கு புரிய வைத்து அன்பாய் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று ஒன்பது ஆண்டுகள் சென்றதே! அப்பா
எங்கு சென்றீர்கள் சென்ற வழி தேடுகிறோம்
வருவீரோ எம் மனக்குறை தீர்க்க...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-4642)

இல. 22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் **37** பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)




- யாழ். நகரத்தில் இருந்து 4 Km தூரத்தில் அமைந்துள்ளது
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணிமுதல் மலை 6.00 மணிரை

ஜெயம்: தரகர் தேவையில்லை (12.06)

077 814 7389, 077 241 7589


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.